எம்மிடம்
வெளி நாட்டில் இருந்து
இறக்குமதியான
வெல்டிங் றொட்
தேவையான அளவு பெற்றுக்
கொள்ளலாம்.
விபரங்கட்கு:
ராம்ஸன்ஸ்
ஹாட்வெயர் ஸ்டோர்ஸ்
19, ஸ்டான்லி றோட், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 508

விலை: சதம் 75

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆடி 30 ஷவ்வால் 13 இதழ் 181
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 14-8-1981

எம்மிடம்.....
இறக்குமதிசெய்யப்பட்ட
றெக்சின் குளோத்
பிளாஸ்டிக் குளோத்
(F) போமிக்கா சீற்
பொலித்தீன் வகைகள்
ஒட்டுப்பசை வகைகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெறலாம்.
H. ESMAILJEE & Co
71-73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். போன்: 8016

# மூன்று பகுதிகளில் ஊரடங்கு அமுல்!

(கொழும்பு)

**ருகம, களனி, நீர்கொழும்பு ஆகிய மூன்று பகுதிகளில் ஆறுமணிநேர ஊரடங்கு உத்தரவு அமுல்செய்யப்பட்டுள்ளது.**

இது சம்பந்தமாக அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், நீர்கொழும்பு பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குள்ளும், களனி பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குள்ளும், ருகம பொலிஸ் நிலைய அதிகாரத்துக்குட்பட்ட பிரிவுக்குள்ளும் ஊரடங்கு உத்தரவு அமுல்செய்யப்பட்டுள்ளதென்றும், ஊரடங்கு நேரம் இரவு 11-00 மணி முதல் அதிகாலை 5-00 மணி வரை அமுலில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்பு நகரில் பூரண அமைதி

## களனி, கந்தானையில் சிறு அசம்பாவிதங்கள்

(கொழும்பு)

கொழும்பு நகரில் நேற்று பூரண அமைதி நிலவியது. எவ்வித அசம்பாவிதங்களும் தலைதூக்காதவண்ணம் ஆயுதப்படையினர் முழு அளவில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

நிலைமை இவ்வாறிருக்க களனி, பேலியகொடை, ஒ...தளை, ஜா-எல, கந்தானை ஆகிய இடங்களில் நேற்றுப் பகல் சிறுசிறு அசம்பாவித

[6-ம் பக்கம் பார்க்க]

# ரூ1,00,000 நகைகள் கொள்ளை

## இருவருக்கு கத்திவெட்டு

[வேலணை]

வடக்கு நாரந்தனையிலுள்ள நகை அடகு பிடிக்கும் வீடொன்றிலிருந்து சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

ஏழு இளைஞர்களைக் கொண்ட கோஷ்டி ஒன்று; நகை அடகுபிடிக்கும்வீட்டுக்குச் சென்று கனகரத்தினசாமியின் பெயரைச் சொல்லி அழைத்த போது அவர் வீட்டுக் கதவை திறந்துகொண்டு வெளியே வந்ததாகவும் பின்னர் அவரைக் கத்தியால் வெட்டிவிட்டு நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றதாகவும் கூறப்படுகின்றது.

இச்சம்பவத்தின்போது இவரின் மனைவியும் கொள்ளையர்களின் கத்தி வெட்டுக்கு ஆளானார்.

இவர்கள் இருவரும் ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## புதிய ஏ. எஸ். பி.

[சாவகச்சேரி]

சாவகச்சேரியில் கடந்த 3 வருடங்களுக்கு முன்னர் பொலிஸ் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய திரு கே. தர்மராசா சாவகச்சேரிப் பகுதிக்கு உதவிப் பொலிஸ் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். [க]

# குகதாசன் மரணம்: ஆயுதம் தாங்கிய கோஷ்டி தாக்கியதாம்!

[மாதகல்]

எம்பிலிப்பிட்டியா கடுதாசிக் கூட்டுத்தாபன உத்தியோகத்தரான ந குகதாசனின் சடலம் நேற்றுமுன்தினம் விமானப்படை விமானமூலம் கொண்டுவரப்பட்டு, விமான நிலையத்திலிருந்து ஊர்வலமாக மாதகலுக்குக் கொண்டுசெல்லப்பட்டது. சடலம் கொண்டு வரப்பட்டபோது மாதகல் மக்கள் கண்ணீர்விட்டு அழுதனர். பல அனுதாபத் துண்டுப்பிரசுரங்கள் வெளியிடப்பட்டன.

### உடல்முழுதும் காயம்

குகதாசனின் உடல்முழுதும் காயங்கள் காணப்பட்டன. சடலம், பச்சைச்சேலையால் போர்க்கப்பட்டிருந்தது. இரண்டு கைகள் முழுவதும் 'பண்டேஜ்' போடப்பட்டிருந்தது. ஒரு கண்ணிலும் நெஞ்சிலும் பலத்த காயங்கள் காணப்பட்டிருந்தன. கால்களிலும் மண்டையிலும் காயங்கள் காணப்பட்டதுடன் சடலம் உருத்தெரியாத நிலையில் இருந்ததாகக் கூறப்படுகிறது.



### கூட்டணி ஆதரவாளர்?

27 வயதான குகதாசனுக்கு இன்னும் திருமணமாகவில்லை. 7 வருடத்திற்குமுன்னர் இவர்

[6 ... ார்க்க]

# கம்பஹாவில் நேற்று நடைபெற்ற சிறிமா கூட்டத்தில் குண்டுவீச்சு

## 18 பேர் காயமுற்றனர்

[கொழும்பு]

கம்பஹாவில் முன்னாள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கைக்குண்டு வீசப்பட்டதையடுத்துக் கூட்டம் குழப்பத்தில் முடிந்தது.

கம்பஹா நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக 18 பேர் காயம் அடைந்தனர். ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

காயமடைந்தோர் கம்பஹா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [இ]

# நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் யாழ். அபிவிருத்திக்கு 15 துறைகள் தெரிவு

[யாழ்ப்பாணம்]

நிறைவேற்றுக் குழுக்களின் செயற்பாடுகள் குறித்து நேற்று யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் நிறைவேற்றுக் குழு கூடி ஆராய்ந்தது.

யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயக்கோன் தலைமையில் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களான யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு எஸ் நடராசா, திரு எஸ் நாகராசா, உடுப்பிட்டி எம் பி திரு ரி இராசலிங்கம், யாழ் மாவட்டச்செயலாளரும்அரசாங்கஅதிபருமான தேவநேசன் நேசையா ஆகியோர் முதல்தடவையாகக் கூடி ஆராய்ந்தனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றுக் குழுக்களுக்கான 15 துறைகள் மூவருக்கும் தலா 5 வீதம் பிரித்து வழங்கப்பட்டன.

இந்த நிறைவேற்றக் குழு. மாவட்ட அபிவிருத்திச் சபையில் அமைக்கப்படும் பல்வேறு குழுக்களுக்கான பெயர்களை ஜனாதிபதியின் அங்கீகாரத்துக்குச்சமர்ப்பித்துள்ளது அங்கீகாரம் கிடைத்ததும்மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர்களுக்கு அந்தந்தப் பகுதி உப குழுக்களுக்கான கடமைகள் வழங்கப்படும். (மா)

# பெருமாள் கோவிலில் இன்று

[யாழ்ப்பாணம்]

வண்ணை ஸ்ரீவெங்கடேஸ்வர வரதராஜப் பெருமாள் கோவிலில் ஸ்ரீவரலட்சுமி உற்சவமும் விரத வழிபாடும் இன்று காலை 10 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

நிலையான வைப்பிற்கு
பிரமிக்கும் வட்டி விகிதங்கள்!
மகாராஜா
இன்வெஸ்ட்மென்ட்
25% வட்டியை
வழங்குகின்றது
6 மாத நிரந்தர வைப்புக்கு 18 வீத
வட்டி வழங்கப்படும்
குறைந்த வைப்பு ரூ. 500/-
மீண்டும் எமது போஸ்ட்டோஸ்ரட் பிரதி சேவை
ஆரம்பமாகியுள்ளது
122, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 8267
தலைமையகம்: 54, பாங்சால் வீதி,
கொழும்பு - 11.

## நியூட்ரன் குண்டு உற்பத்தி

# அமெரிக்காவுக்கு எதிராக பம்பாயில் ஆர்ப்பாட்டம்

பம்பாய் ஆக. 13 நியூட்ரன் குண்டு உற்பத்தி செய்யும் அமெரிக்காவின் தீர்மானித்தைக் கண்டித்து நேற்று பம்பாயில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

லோக்தள் கட்சியைச் சேர்ந்த தொண்டர்கள் பம்பாயில் உள்ள அமெரிக்க தகவல் நிலையத்தின் முன் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. முன்னாள் மத்திய அமைச்சரும் இப்போதைய எம். பி. யுமான திரு. ஜோர்ஜ் பெர்னாண்டஸும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டார். (இ)

## மக்கள் வங்கியில்

# சட்டப்படி வேலை இயக்கம் முன்னேறுகிறதாம்

(யாழ்ப்பாணம்)

நாடெங்கிலும் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் கடந்த மாதம் 15-ந் திகதி ஆரம்பமான ஊழியர்களின் சட்டப்படி வேலை இயக்கத்தில் இப்போது மேலும் பல ஊழியர்கள் பங்கு பற்றுகின்றனர் என தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தார்.

யாழ். பிராந்தியத்தில் உள்ள காங்கேசன்துறை, வவுனியா, ஊர்காவற்றுறை, வல்வெட்டித்துறை, மாங்குளம், நெல்லியடி, மன்னார் ஆகிய கிளைகளில் இச்சட்டப்படி வேலை செய்யும் இயக்கத்தில் இப்போது அதிக ஊழியர்கள் தாமாகவே முன்வந்து பங்கு பற்றி வருகிறார்கள் என்றும் அவர் கூறினார்.

வங்கி நிர்வாகம் மேற்கொள்ள இருந்த அநீதியான பதவி உயர்வு முறையை ரத்துச் செய்யக் கோரியே இச்சட்டப்படி வேலை இயக்கம் நடைபெற்று வருகிறது என்றும் தெரிகிறது. [அ]

## வருடாந்த விழா இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி தெற்கு-தம்பளை வத்தை ஸ்ரீ நாகவரத நாராயணன் வருடாந்த விழா இன்று தொடக்கம் பத்துத் தினங்கள் நடைபெறும்.

அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்கள் விழாக் காலங்களில் மகாபாரத விரிவுரை நிகழ்த்துவார்கள்.

விழாவின் பத்தாம் நாளன்று இரவு விரிவுரைக்குப் பின் தசாவதாரம் இசைப் படக்காட்சி காண்பிக்கப்படும்.

மஞ்சமமர் கந்தன் அருள் அடியார் அனைவர்க்கும் கிட்டுவதாக!

★ YAPPAN JEWELLERS ★

வட இலங்கையில் 3 தலைமுறையாகச் சேவையாற்றிவரும் ஒரேயொரு ஸ்தாபனம்

The most reputed and leading organisation of the type in North Ceylon that has been serving its customers for three generations

Phone No 518

அனலைதீவு ஐயனார் தேர்த்திருவிழா இன்று

## "அனலை ஐயன் அழகார் தேரில்..."

கன்னல் இடையுடைச் பூரணை புட்கலை பாகமுற
வன்னல் அனலை வளநகர் ஐயன் விழவைப்
என்னை எடுத்த சித்திரத் தேர் மிசைச் செல்தரும்
முன்னம் உயர்ந்த அனலை எழிற்பதி வாழியவே!

கண்ணைப் பறித்துயர் வருந்தைப் பழிக்கின்ற
சித்திரங்கள்
எண்ணத்தில் ஆயிரம் இன்பங்கள் சேர்த்திடும்
தத்துவங்கள்
மண்ணுலகத்தில் ஓர் விண்ணுலகோ எனும் தோன்றலை
அண்ணல் வரும் திருக்கோடி தேரழகு காண்பீர்

சாலை கலந்த நல் சாந்து விழிகள்; இதழ்க்கடையில்
அருளைப்பொழிந்திடும் புன்முறுவல் அவர் குன்றிடையில்
பெருகும் அன்னை கூடும் சந்திரன் மதியிலே
வருகும் அனலையின் ஐயன் திருப்பதம் போற்றிடுவீர்!

இன்று அனலை வளநாட்கோர் குறை இப்புவியில்
தொல்லையெலாம் கலைத் தன்னருள் சுட்டுப்
பொசுக்கிடுமே
செல்வியர் பூரணை புட்கலை காதல் மணவாளர்
மூலமலர் நகை சேர்ந்திடும் ஐயன் வாழியவே!

— அனலை- ஆறு இராசேந்திரம்

ஃ ஃ ஃ

## தேரேறி அருள்பொலிய வா

ஏரேறி, நிமலாரும் அனலை பூரில்
ஏனோனும் துயர்நேரா வகையும் வாழ்வும்
தேரேறி புகழ் ஓங்கும் புவனம் எல்லாம்
போராடும் வேளையிலே அமைதி பூக்க
சீரேறி இருபாகம் துணையைக் கொண்டு
சாமி ஐயனார் சித்திரத் தேர்
தேரேறி அருள்பொலிய வருவார் இங்கே
தேனொலிட இனிமை பெற வருவார் இன்றே.

— காவலூர் எஸ். ஜெகநாதன்

# அளவெட்டியில் திருட்டு: பன்விலையில் ஒருவர் கைது!

(பண்டத்தரிப்பு)

பட்டப்பகல் வேளையில் கடை ஒன்றிலிருந்து 11 ஆயிரத்து 500 ரூபா பணத்தை திருடிக்கொண்டு மாயமாக மறைந்த வாலிபர் ஒருவரை பன்விலையில் வைத்து பொலிசார் கைது செய்தனர்.

அளவெட்டி டச் வீதியிலுள்ள நடராசா நவீனராசா என்பவரது கடையில் இத்திருட்டு நடைபெற்றது. கடையிலுள்ள மேசை லாச்சியில் வங்கியில் போடுவதற்காக 11 ஆயிரத்து 500 ரூபா வைக்கப்பட்டிருந்ததாம். இக்கடையில் வேலைசெய்திருந்த மல்லாகம் பகுதியைச் சேர்ந்த தேவராஜும் பெருமாள் என்பவர் இதை அவதானித்துக் கொண்டிருந்துவிட்டு கடையில் ஒருவரும் இல்லாத நேரம்பார்த்து அப்பணத்தை திருடிக்கொண்டு மாயமாக மறைந்து விட்டாராம். இத்திருட்டுப் பற்றி சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த கடை உரிமையாளரான நவீனராசா சுன்னாகம் பொலிசாரின் அறிவுறுத்தலின் பேரில் பன்விலை பொலிஸ் நிலையத்திற்கும் நேரடியாகச் சென்று முறைப்பாடு செய்தார்.

பன்விலைப் பொலிசார் பிரஸ்தாப வாலிபரை அப்பகுதியிலுள்ள தோட்டமொன்றில் வைத்து கைது செய்தனர். திருடப்பட்ட பணத்தில் ஒருபகுதி அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. பிரஸ்தாப நபர் சுன்னாகம் பொலிஸ் பாதுகாப்பில் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும் பொருட்டு வைக்கப்பட்டுள்ளார்.

மஞ்சத்தில் ஏறி வரும் முருகன் அடியார் வினை தீர்ப்பான்

யாழ்ப்பாணத்தில் உங்களது தேய்ந்துபோன டயர்களைப் புதுப்பிப்பதற்குச் சிறந்த இடம்

நோர்தேண் இன்டஸ்ரீஸ்

112, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 7158

## ஆலய சமத்துவ வழிபாடு பற்றி அறிக்கை

(பச்சிலைப்பள்ளி)

யாழ் மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் இந்து ஆலயங்களின் சமத்துவ வழிபாடு தொடர்பாக அப்பகுதி உதவி அரசாங்க அதிபர்கள் இதுவரை எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் பற்றி அறிக்கை சமர்ப்பிக்கும்படி யாழ் செயலகம் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபரையும் கேட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் இதுவரை 63 இந்து ஆலயங்கள் சமத்துவ வழிபாட்டுக்காகத் திறந்து விடப்படவில்லை, என அறியப்படுகிறது. உடுப்பிட்டி, கோப்பாய், காங்கேசன்துறை, வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம் ஆகிய தொகுதிகளிலேயே பெருமளவு இந்து ஆலயங்கள் சமத்துவ வழிபாட்டுக்குத் திறந்து விடப்படவில்லை என தெரியவருகிறது.

அறவழிப் போராட்டக்குழு இது சம்பந்தமாக யாழ் செயலகத்துடன் தொடர்புகொண்டதையடுத்தே, இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## யாழ் டிப்போ மின்சாரசபை நலன்புரிச்சங்கம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபை யாழ் டிப்போ ஊழியர் நலன்புரிச் சங்கக் கூட்டம் மின் அத்தியட்சகர் திரு. எம். நடராஜா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்:- எஸ். எம். சேவியர், செயலாளர் எம். தங்கவேல், பொருளாளர்:- எஸ். ஜெயசீலன் 5பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது. (கு)

நல்லூர்க் கந்தன் அருள் அனைவருக்கும் கிட்டுவதாக!

இத்துறையில் 25 வருட அனுபவமுள்ள எம்மிடம் வெளிநாட்டு, உள்நாட்டு ரேடியோக்களும் அதன் உதிரிப்பாகங்களும் நியாயவிலையில் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் யப்பான் கம்பனியாரின் உன்னத தயாரிப்பிலான GENERAL & J. V. C. - T. V. COLOUR - P & W ரெலிவிஷன்கள் மற்றும்!

ரேடியோ ரேப்றெக்காடர்கள்
கெசற் ரேப்புகள்
வீடியோ ரேப்றெக்காடர்கள்
வீடியோ ரேப்புகள்
வீடியோ, ஓடியோ உபஉறுப்புகள்
கறுப்பு வெள்ளை, கலர் ரெலிவிஷன்கள்
ஸ்பீக்கர்கள்
T. V. ஏரியல் மாற்றுஉறுப்புகள்

தரமானவிலைகளிலும் நம்பிக்கையான சேவையுடனும் அளிக்கப்படும்

★ T. V. அன்ரனு நிர்மாணிப்பதில் வல்லுனர்கள்

General & J. V. C ஏகமாகாண ஏஜென்சி:

ரேடியோ மனுவல்

121, ஸ்ரான்லி வீதி, யாழ்நகர்

தொலைபேசி: 8222

மணிவாக்கு

நீ பிறர்க்குச் செய்த உபகாரங்களை நீயே எடுத்துப் புகழ்தல் தக்கது அன்று.

— ஆறுமுகநாவலர்

# நமது நோக்கு

## 'தருமம் என்றொரு பொருள் உண்டு'

தினை விதைத்தவன் தினை அறுப்பான்; வினை விதைத்தவன் வினையறுப்பான்.

அரசியலுக்கப்பாற்பட்டது அறவியல். மனித வாழ்வு அரசியலுக்கு மட்டும் கட்டுப்பட்டதல்ல; அறத்தின் அடிப்படையில் எழுந்தது.

அறம் குன்றிய இடத்தில் அரசாணுவத்திலேயே நம்பிக்கை வைக்கவேண்டிய அவல நிலை ஏற்படும். ராணுவம் சட்டத்தையும் ஒழுங்கையும் மீறப்பழகிவிட்டால் 'அரகரா' என்று சொல்வதைவிட வேறு வழிவேறெதுவுமில்லை.

வடக்கிலே ஆரம்பமான வன்செயல்கள் நாடு பரவும் பரவி இருப்பதை நாடுகின்றது.

கொழும்பு - யாழ்ப்பாண மெயில்வண்டி, கலவரக்காரர்களுக்கு கைகோர்ந்த இடம். ராணுவ சகிதமாய் பவனிவந்த இவ்வண்டிக்குள் -உறங்கல் இருக்கைப் பெட்டிக்குள் ஆயுதம் தாங்கிய குண்டர்கள் உள்ளிட்டு ஒரு எம். பி. வைத்திருக்க முடியுமானல், அது வடக்கில் நடைபெற்ற பயங்கரவாதம் தேரடி பார்க்கும் வைபவமென்றே கொள்ள வேண்டும்.

கொள்ளைக்கொரு சந்தர்ப்பம் அவசியமானல் கொழும்பு - யாழ் மெயில் வண்டியைத் தாக்குவது சர்வசாதாரணம். ''உயிர் வேண்டாம் உடமையே வேண்டும்'' என்பது கொள்ளைக்காரரின் அர்த்தமான கோரிக்கை. உடமைச்சிற உடலுடன் பிரயாணஞ் செய்வர் தப்பலாமென்பது தப்பு. மணிவாசகரின் 'ஆவியும் உடலும் உடைமையெல்லாமும்' என்ற திருவாசகத்தை, 'குண்டேயனைய' குண்டர்கள் 'உடமையும் உடலும் ஆவியும்' என்ற வரிசையில் மாற்றியமைத்திருக்கிறார்கள். உடமையே முதற்தேவை.

கொலை செய்யப்படுபவர்கள், கொள்ளையடிக்கப்படுபவர்கள், திகிலிரையான சொத்துக்களின் சொந்தக்காரர்கள் அனைவரும் தமிழ் மக்களே! தாங்கள் பிறந்து வாழும் இடங்களிலும், தொழில் செய்து பிழைக்கும் இடங்களிலும், போக்குவரத்திலும் இக்கதிக்காளாகின்றனர்.

இவற்றிலிருந்து தப்பியோடும் இளைஞர்கள்-வேறுநாடுகளில் தஞ்சம் புகுந்தால், அரசும், அரசாங்க சார்புடைய பத்திரிகைகளும் அவர்களை அங்கு தொடர்கின்றன. இதில் விபரீத நிலையென்னவென்றால், ஒரு ஆங்கிலத் தினசரி தனது விசேட நிருபரை ஜெர்மனிக்கு அனுப்ப, ஜெர்மன் பத்திரிகையாளர் தமது நிருபரை இங்கு நடந்த சம்பவங்களை நேரில் பார்க்க அனுப்பியிருந்தனர்.

ஜெர்மனியில் தமிழ் 'அகதிகளின்' திருவிளையாடல்களை, தங்கள் வாசகர்களுக்கேற்ற பாணியில் அங்கு சென்ற நிருபர் விரித்துரைக்க, இங்குவந்த ஜெர்மன் 'பத்திரிகையாளர்' படங்களையும் மக்கள்படும் பாடுகளின் வரலாறுகளையும் அங்கு அனுப்பி வைக்கின்றனர். உண்மைக்குப் பிரசாரத்திற்கு என்பதை பிரசாரகாரர்கள் எவரும் என்றும் உணரவேண்டும்!

இன்று தலைவிரித்தாடும் இனக்கலவரத்தை முற்றாக முறியடித்தலே அரசின் கடமை. ஒருசிறு தொகைத் தமிழர்கள் -பயங்கரவாதிகள், தமிழர் விடுதலைக் கூட்டணியினர்- ஆகுமற் போனாலும் நாட்டுக்கு பெருநட்டம் ஏற்பட்டுவிடாது. பலர் பலதடவைகளில் தங்கள் இவ்வுலக பயணத்தை இடைவழியில் முடித்துவிட்டு பரலோகம் சென்றிருப்பது நாடறிந்தஉண்மை.

ஆனல் இவ்விருசாரார்களைவிட நாட்டின் அபிவிருத்தி வேலைகளையும், அபிவிருத்திச் சபைகளின் வேலைகளையும் குழப்பநிட்ட மிடும் வேறு பேர்வழிகளும் இருப்பதாக ஜனதிபதி ஜெயவர்த்தன தம்முடைய நுண்ணறிவால் உணர்ந்திருப்பது நாடனைத்துக்கும் பெருமகிழ்ச்சிக்குரியது.

இந்தக் குழப்ப முயற்சியில் தமிழர் விடுதலைக்கூட்டணியினர் ஈடுபடாரென்பது திண்ணம். ஜனதிபதியின் 'மாவட்ட அபிவிருத்தி சபை'க்கு ஆதரவு கொடுத்த ஒரே ஒரு அரசியல் கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணியினரே. அரசாங்கம் ... நூற்றுக்கு நூறு ஆதரவு மக்களிடம் பெற்றிருக்கின்றனர்.

எனவே தற்காலிகமாகவாவது ... வைத்து, 'அமைதி நிலவும் ... வுக்கு அலைப்பவர் கொண்டுவரும் எவரையும் தண்டிக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

''நாட்டின் அமைதியை விரும்புகின்ற எல்லா அமைச்சர்களும், அரசாங்க உறுப்பினர்களும் அரசை விரும்புகின்ற மக்களும், சம்பவங்கள் நடக்காமல் தடுக்க அரசுக்கு உதவி செய்யவேண்டும்''—இதுவே ஜனதிபதி ஜெயவர்த்தனவின் உருக்கமான வேண்டுகோள். அவர்களுடைய ஆலோசகர்கள் எவ்வாறாயினும் தருமம் என்றொரு பொருள் உண்டு என்பதை உணர்ந்தவர் ஜனதிபதி.

எரியும் நெருப்பைஎவரும் —சத்திராதியும், தணிக்க உதவவேண்டும்.

எல்லா மக்களும், எவ்வித பேதமும் பாராட்டாமல் இந்த நெருக்கடியைத் தோற்கடிக்க முன்வர வேண்டும்.

## பிரதமர் இன்று மடு விஜயம்

[மன்னர்]

மடுமாதா ஆலய உற்சவத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு பிரதமர் திரு ஆர். பிரேமதாசா இன்று மடுவுக்கு வருகிருர்.

இன்று காலைவரும் திரு. பிரேமதாசாவை யாழ். ஆயர் பேரருட் தியோகுபிள்ளை, மன்னர் மறைமாவட்ட ஆயர் பேரருட் திரு. தோமஸ் சௌந்தரநாயகம், மன்னர் எம் பி. திரு.

[6ம் பக்கம்பார்க்க]

சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட

# முப்படைகளும் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளன

## இராணுவ தொண்டர்படைக்கும் உத்தரவு

[கொழும்பு]

நாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்கு பொலிசாருக்கு உதவுவதற்கு இராணுவம், கடற்படை, ஆகாயப்படைகள் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளன.

அவசியம் ஏற்படும் பட்சத்தில் துப்பாக்கிகளைப் பயன்படுத்தவும் ஆயுதப்படையினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதேசமயம், சகல தரப்பிலுமான தொண்டர் படையைச் சேர்ந்த சகலரும் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

சகல தொண்டர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் உடனடியாகத் தமது தலைமை அலுவலகத்திற்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளனர். தலைமை அலுவலகத்திற்கு வருவதற்கு அண்மையிலுள்ள பொலிஸ் நிலையங்களிலும் இராணுவ முகாம்களிலும் ரயில்வே வாறண்டுகளைப் பெற்றுக் கொள்ளலாமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பணம்வந்து சேராவிட்டால்

# அபிவிருத்தி வேலைகளை நிறைவேற்றுவது கஷ்டம்

## யாழ். அ. ச. தலைவர்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாவட்டவேலைகளுக்கு செலவிடப்பட்ட பணம் 1 கோடி 84லட்சம்ருபா திறைசேரியிலிருந்து வந்து சேர்ந்த தொகை 1 கோடி 15 லட்சம் ரூபா. மிகுதிப்பணம் வந்துசேராவிட்டால் நாங்கள் எடுத்துக்கொண்ட அபிவிருத்தி வேலைகளை நிறைவேற்றுவது மிகவும் கஷ்டமானது.

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத்தலைவர் திரு. எஸ் நடராசா, செவ்வாயன்று நடந்த சபைக்கூட்டத்தில் மேற்கண்டவாறு கூறினர்.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வந்துசேர வேண்டிய மிகுதி 69 லட்சம் ரூபாவையும் உடனடியாக பெற யாழ். மாவட்ட அமைச்சரும், தலைவரும், இணைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூறினர். அவர் மேலும் கூறியதாவது: யாழ்ப்பாண மாவட்டத்திற்கு ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தி திட்டத்திற்கு, அரசின் ஊடாக பிறநாடுகளிலிருந்து பணம்பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கே. துரைரத்தினம்: எங்கள்

[6ம் பக்கம் பார்க்க]



# இன்று நல்லூர்க் கந்தன் மஞ்சத் திருவிழா

கூர்கொண்ட வேலனைப்
போற்றுமல் ஏற்றுங்
கொண்டாடுவீர்கள்
போர்கொண்ட காலன்
உமைக்கொண்டு
போமன்று பூண்பனவுந்
தார்கொண்ட மாதரும்
மாளிகையும் பணச்
சாளிகையும்
ஆர்கொண்டு போவரையோ
கெடுவீர் நும்
அறிவின்மையே.

—கந்தர் அலங்காரம்.


உங்கள் வைப்புத் தொகைக்கு உயரிய வருமானம் உறுதியான பாதுகாப்பு

22% வரை வருட வருமானம் பெறும் 1 வருட சேமிப்புத் திட்டம்.

27% வரை வருட வருமானப் பெறும் 2 வருட சேமிப்புத் திட்டம்.

மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டட்

இலங்கையில் அதி பெரியதும் உறுதிவாய்ந்ததுமான ஓர் நிதி நிறுவனம்.

மாதாந்தமோ முதிர்ச்சியின் பின்னரோ வருமானம் செலுத்தப்படக் கூடிய திட்டங்களைக் கொண்டது.

பாரிய அளவிலான மூலவளங்களைக் கொண்ட நிறுவனம்

மொத்த ஆதனம் ரூபா 32 கோடிக்கும் மேல் மூலதனமும் ஒதுக்கீடுகளும் ரூபா 4 கோடிக்கும் மேல்

பொது மக்களின் நம்பிக்கையைப் பெற்று மகிழும் நிறுவனம்.

6500 க்கும் அதிகமான வைப்பாளருடன் ரூபா 17 கோடியே 5 லட்சத்திற்கும் மேலான தொகையினை வைப்புப்பணமாகக் கொண்டது.



மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டட்

51, ஜனதிபதி மாவத்தை, கொழும்பு 1. தொலைபேசி: 26611 - 8.

கிளைகள்:

யாழ்ப்பாணம் : 11/8 ஸ்ரான்லி றேட். தொலைபேசி: 321
மாத்தறை : 27 1/1 தர்மபால மாவத்தை. தொலைபேசி: 2466
அனுராதபுரம் : 2. ஹரிஸ்சந்திர மாவத்தை. தொலைபேசி: 534
கண்டி : 115. (1ம் மாடி) கொட்டுகொடல வீதி. தொலைபேசி: 4196

செயற் துணைவர்கள் (ஏஜெண்டமார்) எல்லா முக்கிய நகரங்களிலும் உள்ளனர்.

''மேலதிக விபரங்களுக்கு எமது யாழ்ப்பாணக் கிளை அலுவலகத்தை நாடவும்

MASTERS

# திருக்கோயில்களில் இறைவன்

— திருமுருக கிருபானந்தவாரியார் —

எங்கும் நிறைந்தவன் இறைவன். இறை என்ற சொல் 'இறு' என்ற பகுதி அடியாகப் பிறந்தது. சரம் அசரம் என்ற எல்லாப் பொருள்களிலும் தங்கியிருப்பவன் இறைவன்.

''பார்க்குமிடம் எங்கும் ஒரு
நீக்கமற நிறைகின்ற
பரிபூரணானந்தமே''
''அங்கிங்கெனாதபடி எங்கும்
பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்தது''

இறை.

உடம்பிலே உயிரும் உயிரிலே இறையும் தங்கியிருக்கின்றன. உதைபந்து—பந்துக்குள் 'பிளாடர்', அதற்குள் காற்று என்பதுபோல் எல்லாப் பொருள்களையும், எல்லா உயிர்களையும் இயக்குகின்றதனால் அப்பரம்பொருள் இயவுள் எனப் பேர் பெற்றது. 'பெரும் பெயர் இயவுள்'' என்பார் நக்கீரர். எல்லாவற்றையும் கடவுவதனால் கடவுள் எனவும் பேர் பெற்றது.

ஒரு மருத்துவமனையில் மருத்துவர் தங்கி இருப்பதன் நோக்கம் அம் மருத்துவமனையில் உள்ள பிணியாளர்களின் பிணிகளைப் போக்குவதேயாகும். அதுபோல் இறைவன் எல்லா உயிர்களிலும் தங்கி அவ்வுயிர்களின் பிறவிப் பிணியைப் போக்குகின்றனன்.

''உள்ளொடு புறங்கீழ்
மேலாய்
உயிர்தொறும் ஒளித்து
நின்ற கள்வன்''

என்பார் பரஞ்சோதி முனிவர்

'அண்டமும் அளவிலாத
உயிர்களும்
ஆகமாகக் கொண்டவன்'

என்பதும் அவருடைய திருவாக்கு.

இன்னமும் இன்னணம் இறைவன் எங்கும் இருப்பினும் ஞானிகள் திருவுள்ளத்திலும் திருக்கோயில்களிலும் சிறப்பாக விளங்கித்தோன்றுகின்றான். ஏனைய இடங்களில் இறைவன் மறைந்திருக்கின்றான்.

''ஓராதார் உள்ளத்துள்
ஒளிக்கும் ஒளியானே''
— மாணிக்கவாசகர்.

பாலில்நெய் மறைந்திருப்பது போல் பிற இடங்களில் இறைவன் நிறைந்து மறைந்திருக்கின்றான். கடைந்த தயிரில் வெண்ணெய் திரண்டு உருண்டு வெளிப்பட்டு இருப்பது போல் ஞானிகள் உள்ளத்திலும், திருக்கோயிலிலும் இறைவன் விளங்கிக் காட்சி அளிக்கின்றான்.

மற்ற இடங்களில் இறைவனை நினைந்து தியானிப்பதனாலும், துதிப்பதனாலும், வழிபடுவதனாலும் வினைகள் வெதும்புகின்றன. கோயிலில் இறைவனை வழிபட்டால் வினைகள் வெந்து எரிந்து கரிந்து நீறாகி விடுகின்றன.

கொடிய வெய்யிலில் ஒரு துணியை வைத்தால், அத் துணி வெதும்புமேயன்றி வெந்து சாம்பராகாது, சூரிய காந்தக் கண்ணாடியை வெய்யிலில் வைத்து அதன்கீழ் வரும் மற்றொரு வெய்யிலில் துணியை வைத்தவுடனே அத்துணிசாம்பராகிவிடுகின்றது. நேர் வெய்யிலுக்கு இல்லாத ஆற்றல் சூரியகாந்தக் கண்ணாடியின் கீழ் வருகின்ற வெய்யிலுக்கு உண்டு.

பரந்து விரிந்து இருக்கின்ற கதிரவனுடைய வெப்பத்தை ஒன்றுபடுத்தித் தன்கீழே சூரிய காந்தக் கண்ணாடி பாய்ச்சுகின்றது. பிற இடங்களில் இறைவனை வழிபடுவது வெய்யிலில் வேட்டியை வைப்பது போலாகும். திருக்கோயிலில் இறைவனை வழிபடுவது சூரிய காந்தக் கண்ணாடியின் கீழே வைப்பதுபோலாகும். ஆதலால் திருக்கோயில் வழிபாடு இன்றியமையாததாகும்.

''மலறநேயம் மலிந்தவர்
வேடமும்
ஆலயந்தானும் அரன் எனத்
தொழுமே''

என்பது சிவஞானபோதம்.

திருக்கோயில்களிலுள்ள திருவுருவங்கள் வேதங்களாலும், முனிவர்களாலும், நால்வர், ஆழ்வார்கள் ஆகிய ஆன்றோர்களாலும் நிறுவப்பெற்ற காரணத்தால் அவை மேன்மை பெற்று வழிபடுவோருடைய வல்வினைகளை அகற்றி, வேண்டிய வரங்களை வழங்கி அருள் புரிகின்றன.

பசுவின் உடல் முழுவதும் பால் பரவி இருப்பினும் மடியின் மூலமாக அதனைப் பெறுவதுபோல் எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவனுடைய திருவருளைத் திருக்கோயில்களில் உள்ள திருவுருவங்கள் மூலமாக நாம் பெறுதல்வேண்டும்.

ஒரு பறவை இரு சிறகுகளைக் கொண்டு பறப்பதுபோல், இறைவழிபாட்டிற்கு பூவும், நீரும் வேண்டப்படுகின்றன.

'புண்ணியம் செய்வார்க்குப்
பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டு
அருள்புரியா நிற்கும்''

என்பது திருமந்திரம்.

எங்கும் நிறைந்த இறைவனை எங்கும் எளிதாகக் கிடைக்கக் கூடிய பூவினாலும், நீரினாலும் நாம் வழிபட வேண்டும். வழிபாட்டிற்கு அன்பு ஆசாரமும் இரண்டு கண்கள் போன்றவை

''அன்புடன் ஆசார பூசை
செய்து
உய்ந்திட வீணாள் படாது
அருள்புரிவாயே''

என்று அருணகிரிநாத சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றார்.

திருக்கயிலாய மலையில் பார்வதி பரமேச்வரர் மீது விளையாட்டாக வில்வக் கிளையை உதிர்த்த குரங்கு அபுத்திபூர்வமாகச் செய்த அச் சிவ புண்ணியத்தால் பூவுலகிற் பிறந்து, முசுகுந்தச் சக்கரவர்த்தி என்ற பெயருடன் மூவுலகும் ஆண்டது.

''வில்வக் கிளையுதிர்த்த
வெய்ய
முசுக்கலையைச்
செல்வத் துரைமகனாய்ச்
செய்தனையோ''
—திருவருட்பா

இறைவழிபாடு செய்து மார்க்கண்டேயர் மறலியை வென்ற வரலாறு உலகம் அறிந்த ஒன்று.

ஆத்மஜோதியில் அருட்ஜோதி சூழ சிவ ஜோதி விளங்குகின்றது.

ஆத்மஜோதி—வட்டமாகிய
கல்,
அருட்ஜோதி—சூழ்ந்திருக்
கின்ற ஆவுடையார்,
சிவஜோதி—மேல் நோக்கிய
இலிங்கம்,
இதுதான் சிவ லிங்கத்தின்
உண்மை.

''ஜோதியுள் ஜோதியுள்
ஜோதி''

என்பார் இராமலிங்க அடிகளார்.

கோயில் ஐந்து பிரகாரங்களோடு கூடியது. இந்த உடம்பே இறைவன் இருக்கின்ற திருக்கோயில், இந்த உடம்பும் அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமயகோசம் என்ற பஞ்ச கோசங்களையுடையது.

உடம்பில் 32 கட்டுக்களோடு கூடிய முதுகுத்தண்டே திருக்கோயிலில் கொடிமரமாகக் காட்சியளிக்கிறது. கொடிமரத்தில் கொடியேறியவுடன் இறைவன் வெளியே வந்து காட்சியளிக்கிறான். அதுபோல முதுகெலும்பாகிய வீணாதண்டத்தில் வளைந்து செல்லுகின்ற சுழுமுனை என்ற வெள்ளை நரம்பின் வழியாகப் பிராணவாயு ஆறுதாரங்களையும் கடந்து, பிரமாந்திரத்தைத் தாண்டி சகஸ்ராரவெளியிலே சென்றவுடன் சிவஜோதிகாணப்படும்.

திருக்கோயிலில் விளங்கும் பத்திர இலிங்கமாகிய பலிபீடம் பாசத்தையும், நந்தி தேவர் பசுவையும், சிவலிங்கம் பதியையும் குறிப்பிடுகின்றன.

நமது சாரீரத்தில் உள்ள மூலாதாரம், சுவாதிஷ்டானம் மணிபூரகம், அநாகதம், விசுத்தி. ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களையும் கோயிலிலுள்ள யாகமண்டபம், அலங்கார மண்டபம், கல்யாணமண்டபம், நிருத்தமண்டபம், மகா மண்டபம் அர்த்த மண்டபம் என்ற மண்டபங்கள் தெரிவிக்கின்றன. எனவே திருக்கோயிலில் சென்று இறைவனை வழிபட்டு அங்கே கண்ட பரம்பொருளை நம்உடம்புக்குள்ளேயும் கண்டு மனோலயம் பெற வேண்டும்.

''உள்ளம் பெருங்கோயில்
ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய்
கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு
சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா
மணிவிளக்கே''
— திருமந்திரம்.

கட்டையில் கனல் மறைந்திருக்கின்றது. ''விறகில் தீயினன்'' என்கின்றார் அப்பர் பெருமான். கட்டையைக் கடைந்தவுடன் அதில் மறைந்த கனல் வெளிப்பட்டுக் கட்டை கனலாகக் காட்சியளிப்பது போல், உயிரில் ஒளித்திருக்கின்ற இறைவனை ஞானத்தால் அடைவோமாயின் சிவம் வெளிப்பட்டுச் சீவனைச் சிவமாக்கிக் கொள்ளுகிறது.

எண்ணில் காலமாக எண்ணிலாத உடம்பு எடுத்துவருகின்ற நாம் இறைவனை மெய்யன்புடன் உள்ளம் குழைந்து உருகி மலரிட்டு அர்ச்சனைசெய்து வழிபட்டால் பிறவிநோய் தீரும்.


நல்லைக்கந்தன் அருள்
அனைவருக்கும் கிடைக்க வேண்டுகின்றோம்!

நம்பிக்கையான நவநாகரீக தங்க வைர
நகைகள் வேண்டுமா ?

**பொ. அம்பலவாணர்**

தங்க, வைர நகை வியாபாரம்

118, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்,
போன்: 7199. தந்தி: 'வைரம்'



''மஞ்சம் மீதேறி மக்களைக் காக்க,
மயிலேறும் மன்னா வருக.''




மில்க்வைற் மேலுறைகளின் சாயலில் வேறுசிலர் தங்கள் தயாரிப்புகளையும் உருவாக்கி விற்பனை செய்ய முயற்சிக்கிறார்கள். மக்கள் போலிகளை வாங்கி ஏமாறுதிருக்க வி. எம். கே. அடையாளமும், திருக்குறளும் பொறிக்கப்பட்ட மேலுறைகளை அவதானித்து வாங்குங்கள்.

500 மில்க்வைற் மேலுறைகளுக்கு ஒரு அழகிய துவாய் இனாம்

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்**

யாழ்ப்பாணம்.



நல்லைமுருகன் அருள் எல்லார்க்கும் கிட்டுக!

அரிவையர் அழகிற்கு மேலும் அழகூட்டுவது ஆபரணங்களே. கைதேர்ந்த பொற் தொழிலாளரின் கைவண்ணத்திலான நவீன டிசைன்களில் உங்கள் நகைகளைத் தெரிவு செய்வதற்கு நாடுங்கள்.

**கே. கே. வி.**

**யாழ்ப்பாணம் நகைமாளிகை**

தங்க வைர நகை வியாபாரம்

82/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

★ வி.பி.பி. உடன் கவனிக்கப்படும்
ஓடர்கள் குறித்ததவணையில் செய்து கொடுக்கப்படும்.

**K.K.V. JAFFNA JEWEL HOUSE**

82/4, Kasturiar Road, JAFFNA.

தொலைபேசி: 362

# நல்லைக் கந்தன் சிறப்பு மலர்

## ஒரு திருமுருகன் வந்தான்!

— குமரி ஞானப்பிரகாசியார் —



உலகத்தில் வாழ்கின்ற மக்கள்யாவரும் அவரவர் விருப்பத்தின்படி கடவுளை வணங்கி வந்தாலும் யாவரும் பொதுவாக முருகனை வணங்கி வருகிறார்கள். யாவரும், முருகனை வணங்குவதில் ஒரு உற்சாகம் ஏற்படுகிறது. முருகவழிபாட்டில் ஈடுபட்ட மக்கள் வாழ்க்கை இன்பமயமாகவே நடைபெற்று வருவதில்சந்தேகமில்லை. கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாய்க் கொண்டாடி வரும் கடவுள் முருகனேயாகும்.

''ஆரிருந்தென்ன முன்பின்
துன்பம் நீங்க,
அருள் புரிவதற்கு
உனையல்லால் அண்டருலகத்
திலும்
பூமண்டலத்திலும்
தார் மிகும் சூரசங்கார மயில்
வீரனே
தமியேனை யாள்வாய்''

என்ற படி முருகன் தன்னை, விரும்பித் துதிக்கும் அடியார்களுக்கு நினைத்தது அளித்து வருகிறான். முருகனுக்கு எத்தனையோ நாமங்கள் இருப்பினும் யாவரும் விரும்பிச் சொல்வது முருகன் என்ற நாமமேயாகும். அநேக நாமங்களைக் கூறுவதினால் வரும் பயன்கள் அத்தனையும் முருக நாமம் ஒன்றில் வரும். பல நாமங்களால் கிடைக்கும் பொருள்யாவும் இம் முருக நாமம் ஒன்றினால் கிடைக்கின்றது. அதனாலேயே ''மெய்ம்மை குன்றா மொழிக்குத் துணை முருகாவெனும் நாமங்கள்'' நக்கீரதேவரும்,

''முருகா என்று ஓது வார் முன்
அஞ்சுமுகம் தோன்றின்,
ஆறுமுகம் தோன்றும்,
வெஞ்சமரர் தோன்றில் வேல்
தோன்றும்
நெஞ்சில் ஒருகால் நினைக்கில்
இருகாலுந் தோன்றும்''

என்று உபதேசித்தனர்.

''முருகா என ஓர் தரமோ தடியார் முடி மேலிணைதாள்— அருள்வோனே'' என்று அருணகிரியார் கூறுகிறார் ஆதலால் முருகன் என்ற நாமம் எல்லா நாமத்திலும் தலை சிறந்திருப்பதாகும். முருகனைக் கும்பிட்டு அவன் அருள் பெறுவது எப்படி என்பதை முருகபக்தர்கள் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். அதாவது முருகவழிபாட்டிற்கும் இடையறாத உறுதியிருத்தல் வேண்டும் உறுதி இன்றிச் செய்யப்படும் வழிபாடு யாதாயினும் போலியாக முடியும். கடல் பொங்கினும், மலை குலைந்து சாயினும், வானிடிந்து வீழினும், முருகன் நம்மைக்காப்பான் என்னும் உறுதி முருகவழிபாட்டிற்கு இன்றியமையாததாகும் இவ் வுறுதியுடையார் விரும்பும் எல்லா நன்மைகளும் பெறுவர். முருகப் பெருமான், தன்னை வழிபடுவோருக்குத் தோன்றாத் துணையாயிருந்து செய்துவரும் பேருதவி அவன் அடியாருக்குத் தெரியும், மன உறுதியால் எல்லா நன்மைகளும் முருகனிடம் பெறலாம். உறுதியென்பது அரிதாயும் எளிதாயுமிருக்கிறது. உதிப்போற்றுக்கு ஏட்டுக்கல்வி ஆராய்ச்சி தேவையில்லை. உறுதிக்கு இன்றியமையாதது ஒன்று உண்டு. அதுவே அன்பு.

முருகன் உண்மை சன்று இயற்கைவாழ்வு செலுத்தி நோன்புகாத்த அழியாப் பேறு பெற்ற சித்தர்கள் வாழ்ந்த நாடு நம் நாடு. முருக வழிபாட்டிற்கு இல்லறமே சிறந்ததாகும். இல்லறம் என்பது இயற்கை அறம். இல்லறம் இளமை, அழகு முதலியவற்றைக் காத்து மக்கட் பேறு நல்கி கடவுட்தன்மை எய்துவதற்கு இயல்பாய் இயற்கையாய் அமைந்துள்ள நல்லறமாகும்.



நல்லையில் நிலைத்த ஒளி

### கந்தன் எனும் செல்வம்

சிவனர்க்கும் உமையவட்கும் தித்திக்கும்செல்வம்
சிந்தனைக்கும் வந்தனைக்கும் தேனாய் செல்வம்
பவ..ாய மிகப்போக்கி வீடருளும் செல்வம்
பற்றிலர்க்குப் பற்றாய வேல்கொண்ட செல்வம்
தவமேவும் அடியவர்க்கு நலன் சேர்க்கும்செல்வம்
தரணியொடு வான்போற்றும் சீர்மிகுந்த
செல்வம்
நவமாய பொலிவுடனே விளங்குகின்ற பதியாம்
நல்லையினிற் கந்தனென நலன்விளைக்கும்
செல்வம்

ம. பார்வதிநாதசிவம்

பாடசாலைகளில் நடைபெறும் விழாக்கள், திருமணவைபவங்கள் மற்றும் களியாட்ட விழாக்களில் விருந்தினர் மத்தியில் பரிமாறிட இன்சுவைக் குளிர்பானங்கள் தயாரிக்கத் தேவையான மூலப்பொருட்கள் மலிவு விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்

ஐடியல் ஏஜென்சி

எசன்ஸ் கனல்

சகல எசனஸ் வகைகளும், ஐஸ்கிறீம் பழரச குளிர்பானங்கள், கேக் போன்றவை தயாரிக்கத் தேவையான பொருட்களுக்கும் கோடியல் வகைகள், ஜாம் வகைகள், பால்மாவகைகளுக்கும் விஜயம் செய்யுங்கள்.

ஐடியல் ஏஜென்சி
ESSENCE CANAL

தொலைபேசி: 7648

239, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

# "தமிழ்ஈழ எதிர்ப்பிரசாரத்திற்கு வெளிநாடுகளில் வசதி குறைவாகவுள்ளது"

## — பிரதமர் பிரேமா

[கொழும்பு]

வெளிநாடுகளில் தமிழ் ஈழப் பிரசாரத்திற்கு எதிர்ப்பிரசாரம் செய்யக்கூடியவகையில் அந்நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் தகவல் தொடர்புவசதிகள் போதியதாக இல்லை.

இவ்வாறு பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

பிரிட்டன், மேற்கு ஜெமனி, யூகோஸ்லாவியா ஆகிய நாடுகளுக்கான தமது விஜயம் குறித்து அமைச்சரவையில் சமர்ப்பித்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எமது நாட்டைப் பற்றி வெளிநாடுகளில் தவறான தகவல்கள் பரப்பப்படுகின்றன. இலங்கையிலிருந்து எமது வெளிநாட்டுஸ்தாபனங்களுக்கு அனுப்பப்படும் உண்மையான தகவல்கள் அவர்களுக்குக் கிடைப்பதில்லை.

எமது அரசுக்கு எதிராக வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் தவறான பிரசாரத்திற்கு எதிர்பிரசாரம் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்காக எமது தூதரகங்களில் பிரதி ஸ்தானிகரின தரத்திலான முழு அதிகாரியை நியமிக்கவேண்டும்.

இந்தவேளையில் இப்பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பிரதமர் தலைமையில் அமைச்சரவை உபகுழு ஒன்று நியமிக்கப்பட்டது. வெளிநாட்டமைச்சரும, ராஜாங்க அமைச்சரும் இக்குழுவின் ஏனைய அங்கத்தவர்களாவர். [இ]

---

## பணம்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

சபைக்கென தனியான வங்கி வேண்டும். கூட்டுறவுமுறையில் அல்லது வேறு விதத்தில் இது இருக்கவேண்டும். அரசின் அனுமதியுடன், நாங்கள் வெளிநாடுகளில் பெறும் பணத்தையும், மீதிப்பணத்தையும போடலாம். அனாவசிய செலவுகளை நீக்கி பணத்தைச் சேமிக்கலாம்.

க. சின்னத்துரை: 79ம், 80ம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பணத்தில் வேலைகள் பல இன்னும் செய்து முடிக்கப்படவில்லை. 81ம் ஆண்டு டிசம்பருக்கு முன் இவ்வேலைகள் செய்துமுடிக்கப்பட வேண்டும்.

கே. துரைரத்தினம்: இந்த அரசு 83க்கு பிறகு வருமோ என்று தெரியாது. அப்படியிருக்க 84ம் ஆண்டு திட்டம் பற்றி கூறுகிறது. நாங்கள் குறுகிய காலத்திட்டம், நீண்டகாலத்திட்டம், உருண்டோடும் திட்டம் ஆகியவைகளில் கவனம் செலுத்தவேண்டும்.

முன்னர் ஆரம்பிக்கப்பட்ட வீடமைப்புத் திட்டங்கள் பல பூர்த்தியாகாமல் இன்னும் குறையாக இருக்கின்றன. இவற்றை விரைவில் பூர்த்தி செய்யவேண்டுமென்ற திரு.க. சின்னத்துரையின் பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது. [க-இ]

---

# கோஷ்டித் தாக்குதலுக்கு பெண் பலி!

## களனியில் சம்பவம்

[யாழ்ப்பாணம்]

சுமார் 50 வருட காலமாகக் களனியில் வாழ்ந்துவந்த திருமதி சின்னத்துரை என்ற பெண்மணி நேற்று முன்தினம் ஒரு கோஷ்டியினரின் தாக்குதலுக்குப் பலியானார்.

சம்பவதினம் இவர் வீட்டில் இருந்தபோது ஒரு கோஷ்டியினர் கோஷமிட்டுக்கொண்டு பிரஸ்தாப பெண்ணின் தலையில் தாக்கியதாகவும், அதனைத் தொடர்ந்து அவர் மரணமானார் என்றும் கூறப்படுகின்றது.

### இவர்கள் தப்பித்துக்கொண்டனர்

அச்சமயம் திருமதி சின்னத்துரையுடன் வீட்டிலிருந்த டாக்டர் சென்ஜோர்ஜின் பாரியாரும், காலஞ்சென்ற முன்னாள் யாழ். அரசாங்க அதிபர் ஜோசப்பின் மகனான ரவீந்திரனும் ஓடிச்சென்று குளியல் அறையில் ஒளித்துக்கொண்டதாகவும், அக்கோஷ்டியினர் வீட்டில் தேடுதல் நடத்திவிட்டுச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

கரம்பனைச் சேர்ந்த திருமதி சின்னதுத்துரையின் பிள்ளைகள் வெளிநாட்டில் உயர் பதவிகளில் இருப்பதாகத் தெரியவருகிறது. இறுதிச் சடங்குகள் நேற்றுக் களனியில் உள்ள அவரது சொந்த வீட்டில் நடைபெற்றது.

---

## பிரதமர்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

பி. எஸ். குமாரதாசன், மன்னார் அரசாங்க அதிபர் திரு. கமலஸ் பெர்னாண்டோ, மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. சுயஸ் பெல்டானோ ஆகியோர் வரவேற்பார்கள்.

திரு. பிரேமதாசா தங்குவதற்கென படுவில் தனியான விடுதியொன்று நிறுவப்பட்டுள்ளது.

அந்தவேளை மடுமாதா ஆலயத்தில் வருடாந்த ஆவணி மாத உற்சவத்தை முன்னிட்டு இன்று வெஸ்பர் ஆராதனையும், நற்கருணைப் பவனியும் இடம் பெறும்.

நாளை காலையில் நடைபெறும் விசேட திருப்பலி பூசையையடுத்து இடம் பெறும் மாதா திருச்சொரூப சுற்றுப் பிரகாரத்துடன் வருடாந்த உற்சவம் முடிவடையும்.

நாளை நடைபெறும் விசேட திருப்பலிப் பூசையை மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் திரு. தோமஸ் சௌந்தரநாயகமும், கொழும்பு ஆயரும் இணைந்து தமிழிலும் சிங்களத்திலும் ஒப்புக்கொடுப்பார்கள்.

ஆலய உற்சவத்தில் கலந்துகொள்ள வருவோர் தம்முடன் துப்பாக்கிகளை எடுத்துவருவதும் தடை செய்யப்பட்டுள்ளதுடன், ஆலயச் சுற்றுடலில் உள்ள காடுகளில் மிருகங்களை வேட்டையாடுதலும் தடை செய்யப்பட்டுள்ளது. [இ]

---

## ஆயுதம்தாங்கிய...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வாழைச்சேனைக் கடுதாசிக் கூட்டுத்தாபனத்தில் ஊழியராகச் சேர்ந்தார். வாழைச்சேனைக் கூட்டுத்தாபனத்திற்குப் புதிய தலைவர் வந்தபின், கடந்த வருடம் இவர் எம்பிலிட்டிப்பிட்டியா ஸ்டோருக்கு இடமாற்றம் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

வாழைச்சேனைக் கடுதாசித் தொழிற்சாலை தமிழ்த்தொழிற் சங்கக் கூட்டணித் தலைவராக விருந்த இவர், அங்கு நடந்த விளையாட்டு விழாவுக்கு எதிர்க்கட்சித்தலைவர் திரு ஏ. அமிர்தலிங்கத்தைப் பிரதமவிருந்தினராக அழைத்திருந்ததாகவும், இதனாலேயே இடமாற்றம் செய்யப்பட்டார் என்றும் இந்த இடமாற்றம் பற்றி திரு. அமிர்தலிங்கம் பாராளுமன்றத்திலும் எடுத்துக்கூறியதாகக் கூறப்படுகிறது. இடமாற்றத்தின்பின் அந்த விளையாட்டு விழாவில் திரு. அமிர்தலிங்கம் கலந்துகொள்ளவில்லை எனத் தெரியவருகிறது.

### எம்பிலிப்பிட்டியாவில் இருந்து கம்புறுப்பிட்டியாவுக்கு

எம்பிலிப்பிட்டியாவுக்கு மாற்றப்பட்ட இவர், அங்கிருந்து 75 மைல்களுக்கு அப்பாலுள்ள கம்புறுப்பிட்டியாவுக்கு இடமாற்றஞ்செய்யப்பட்டார். மீண்டும் அங்கிருந்து அம்பலாங்கொடைக்கு இடமாற்றஞ்செய்யப்பட்டார்.

கடந்த திங்கட்கிழமை இரவு அம்பலாங்கொடை ஸ்டோரில் உள்ள அறையில் இவருடன் மற்றும் 4 தமிழ் உத்தியோகத்தர்கள் உரையாடிக் கொண்டிருந்தபோது திடீரென ஆயுதம் தாங்கிய ஒரு கோஷ்டியினர் புகுந்து அவர்களைத் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தில் படுகாயம் அடைந்த குகதாசனும், மலைநாட்டைச் சேர்ந்த நடராசனும் பலியானார்கள். மற்றும் 3 தமிழ் உத்தியோகத்தர்கள் படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படடுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆயுதம் தாங்கிய கோஷ்டியினருடன் 5 தமிழ் உத்தியோகத்தர்களும் எதிர்த்துப் போராடினார்களென்றும் இதனால் அக்கோஷ்டியில் வந்த இருவரும் காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து வாழைச்சேனைக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம் மூடப்பட்டுள்ளது. அங்கு கடமையாற்றிய சகல ஊழியர்களும் தங்கள் சொந்த இடங்களுக்குச் சென்றுள்ளனர்.

### இறுதிச்சடங்கில் திரளான மக்கள்

[பண்டத்தரிப்பு]

எம்பிலிப்பிட்டியா காகிதத் தொழிற்சாலையில் தரக்கட்டுப்பாட்டு அதிகாரியாகக் கடமையாற்றி வன்செயலுக்குப் பலியான நவரத்தினராசா குகதாசனின் ஈமக்கிரியைகள் நேற்றுப் பிற்பகல் மாதகலில் நடைபெற்றபோது பெருந்தொகையான பொதுமக்கள் கலந்துகொண்டனர் மாதகல், பண்டத்தரிப்பு ஆகிய இடங்களில் சோகம் நிலவியது. [க]

---

## துன்னாலை ராஜகோபால் கொலை: 1-வது சந்தேக நபருக்குப் பிணை அனுமதி

[புலோலி]

கயிற்றில் தொங்கியபடி இறந்துகிடந்த துன்னாலை டைக்கு வாலிபர் இராசா இராசகோபால் [வயது 26] கொலை வழக்கின் முதலாவது சந்தேகநபர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முதலாவது சந்தேகநபரான சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியத்தின் பிணைமனுவை ஏற்றுக்கொண்ட யாழ். மேல் நீதிமன்றம் அவரை ஐயாயிரம் ரூபா உறுதிப்படுத்தப்பட்ட பிணையில் செல்ல அனுமதித்துள்ளது.

பருத்தித்துறை நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இச்சந்தேகநபர் நீதவான் திரு கே எஸ் மகேசன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது, நீதிவான் அவரிடம் பிணையில் செல்ல யாழ் மேல் நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளதை அறிவித்து, இறந்தவரின் குடும்பத்தவர்களுடனோ, சாட்சிகளுடனோ சச்சரவு எதுவும் வரக்கூடிய முறையில் நடந்து கொள்ளக்கூடாது என்றும், யாழ். குடாநாட்டில் இருக்கும்போது ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பருத்தித்துறை பொலிஸ்நிலையத்தில்கையொப்பம் இட்டுவரவேண்டும் என்றும், தொழில் காரணமாக கொழும்புசென்றால் கோட்டைப் பொலிஸ் நிலையம் சென்று ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கையொப்பமிடவேண்டும் என்றும் விதிக்கப்பட்டுள்ள பிணைநிபந்தனைகளைத் தெரிவித்தார்.

இதர சந்தேகநபர்களான மாணிக்கம் சின்னத்தம்பி, வடிவேலு சரவணசிவா ஆகிய இருவரும் தொடர்ந்து றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

---


# மிகவும் குறைந்த விமானக் கட்டணத்தில்

- மத்தியகிழக்கு
- சிங்கப்பூர்
- பாரீஸ்
- நைஜீரியா
- லண்டன் ரூபா 7,500-00 (ஒருவழி) ரூபா 14,205-00 (இருவழி)

மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும்

## உலகின் எப்பாகத்துக்கும்

- எவ்வித கூடுதல் கட்டணமுமின்றி நீங்கள் விரும்பிய விமானத்தில் பிரயாணஞ் செய்வதற்குரிய

## விமான டிக்கட்டுகள்

வங்கியில் அறவிடப்படும் அதே கட்டணத்தில் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் பிரயாணக் காசோலைகள்

★ நைஜீரியன் விசா

ஆகியவற்றைக் கொழும்பு செல்லாமல் யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளப் பிரபல்யமான MACKINNON, MACKENZIE & Co. of CEYLON LIMITEDன் ஒரேயொரு யாழ்ப்பாணக் கிளையான எங்களை நாடுங்கள்

# மக்கினென்ஸ் ட்றவல் சேவிஸ் (சிலோன்) லிமிட்

8, பருத்தித்துறை வீதி - யாழ்ப்பாணம்.
த. பெ, எண் 92 தொலைபேசி: 8154


---

## உடைகள் புத்தகங்கள் உதவி

[பச்சிலைப்பள்ளி]

எழுதுமட்டுவாளில் இடம் பெற்ற சமூகங்களுக்கிடையிலான மோதலின்போது வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அறவழிப் போராட்டக்குழு. உடுதுணி வகைகளையும், மாணவர்களுக்குப் புத்தகங்களையும் வழங்கவுள்ளது. இவைகள் நாளை சனிக்கிழமை சாவகச்சேரியில் உள்ள அறவழிப் போராட்டக் குழுப் பணிமனையில் வைத்து வழங்கப்படும். [அ]

---

## கொழும்பு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சம்பவங்கள் நடைபெற்றபோதிலும் ஆயுதப்படையினரின் உஷார் நடவடிக்கைகளினால் நிலைமை கட்டுக்குள்ளானது.

களனியில் உள்ள எண்ணெய் ஆலை ஒன்று நேற்று எரிக்கப்பட்டது.

கொழும்பு நகரில் அசம்பாவிதசம்பவங்கள் நடைபெறுவதாகவும் நகரின் சில பகுதிகளில் வன்செயல்கள் தலைதூக்கியதாகவும், வெளிமாவட்டங்களில் பாப்பப்பட்ட வதந்திகளில் உண்மை எதுவும் இல்லை என்று 'ஈழநாடு' கொழும்பு நிருபர் நேற்றிரவு அறிவித்துள்ளார். [ம]

---


இரண்டாம் பதிப்பு வெளிவந்துவிட்டது
அதிவேக விற்பனையுள்ள நூல்

வரதர் வெளியீடு 'நீலவண்ணன்' எழுதிய

அளிக்கும்

மீண்டும்

# யாழ்ப்பாணம் எரிகிறது

நல்ல கடதாசியில் அச்சிடப்பெற்று தடித்த அட்டை நேர்த்தியான கட்டுக்கோப்புடன் கூடிய

சிறப்புப் பதிப்பு விலை ரூபா 12-00

ஆனந்தா புத்தகசாலை
யாழ்ப்பாணம். 0618


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்பண்ணை வீதி, 63ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாடு' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 603ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஓகஸ்ட் 14ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office, Sri Lanka. Regd. QB 10023/81. P. O. Box 49, Jaffna. தொலைபேசி 7707, 389, 8136.

அனைவருக்கும் நல்லைக்கந்தன் அருள் கிட்டுவதாக

எம்மிடம் கேக் தயாரிப்பதற்குரிய
பட்டர், அஸ்ராமாஜரின்
ஜிஞ்ஜர், பிறிசேவ், சௌசௌ, பம்கிங்,
கண்டிப்பீல், ஸ்ரோபெறி ஜாம்,
கோல்டன்சிறப்

செறிஸ், கறன்ஸ், றேசன்ஸ், பிளம்ஸ், கஜு, எசென்ஸ் வகைகள். ஐசிங்சுகர், மாச்சினி ஆகியவையும், இறக்குமதி செய்யப்பட்ட பிஸ்கட், சீஸ்வகைகள், பாண் தயாரிக்கும் ஈஸ்ட், கைகோ, பீகாவ் மாஜரின் லீவர்பவுடர், குளிர்பானம் தயாரிக்கும் பொருட்கள். வீட்டுப் பாவனைப்பொருட்கள் ஆகியவற்றை நிதான விலையில் பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்

## ஸ்ரீ சாயி ஸ்ரோஸ்

141, நவீனசந்தை (இரண்டாம் கட்டிடம்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 660



யாழ்நகரில் சுவையான ஐஸ்கிறீம்,
குளிர்பானங்களுக்கு இன்றே
விஜயம் செய்யுங்கள்
கேக், மட்டன் றோல், கட்லட், பற்றிஸ்
சுவீற்ஸ், கல்யாணி பீடா
ஐஸ்கிறீம், குளிர்பானங்கள்
மற்றும் சகலவிதமான
திருமண வைபவங்கள், பிறந்ததின
வைபவங்கள், விழாக்கள்
களியாட்டங்கள்
அனைத்துக்கும் தேவையான
கேக், பற்றிஸ், பீடா, ஐஸ்கிறீம்
முதலியவற்றை ஓடர்செய்து குறித்த
நேரத்தில் பெற்றுக்கொள்ள
யாழ். நகரில் சிறந்த இடம்

## கல்யாணி கிறீம் ஹவுஸ்

73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 8077



அறுசுவை உண்டிக்கு
தேவி விலாஸுக்கு
விஜயம் செய்யுங்கள்

★ சுத்தம் ★ காற்றோட்டமான
★ இடவசதி பண்பான உபசரிப்பு

எமது பண்ணையிலிருந்து
பெறப்பட்ட சுத்தமான
பசு நெய் எம்மிடம் கிடைக்கும்

## தேவிவிலாஸ்

288, கே. கே. எஸ். வீதி,
(சிவன்கோவில் வடக்குவீதிச் சந்தி)
யாழ்ப்பாணம்.



கருணையே வடிவமான
கந்தனே வணங்குகின்றோம்
அருளினை வழங்கி மக்கள்
அவலங்கள் நீக்குவாயே

## ஸ்ரீ சண்முகநாத அச்சகம்

காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 285



தொலைபேசி } 7169
Phone } 8025

வண்ணத் துணியுகத்து
வளமார் வகையனைத்தும்
எண்ணம்போல் தேர்ந்தெடுக்க
ஏற்றதோர் எழிற்கூடம்

## கணேசன் ஸ்ரோர்ஸ்

63 - 78, கே. கே. எஸ். வீதி,
யழ்ப்பாணம்.


# நல்லூரை வலம் வந்தால் . . .



இராகம் — பிலஹரி  தாளம் — ரூபகம்

பல்லவி

எந்நாளும் நல்லூரை வலம் வந்து வணங்கினால்
இடர்கள் எல்லாம் போமே

அனுபல்லவி

அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்த இடம்
அதுவாதலாலே அதிசயம் மெத்த உண்டு

சரணம்

வேதாந்த சித்தாந்தம் கற்றதனாலென்ன
வேடிக்கைக் கதைகள் பேசினாலென்ன
வீதியில்வந் தொருக்கால் விழுந்து கும்பிட்டால்
வில்லங்கம் எல்லாம் இல்லாமற் போமே
சத்தியம் பொறுமை சாந்தம் அடக்கம்
நித்தியா நித்தியம் தெரியும் நிபுணர்
பத்தி செய் உத்தமர் பரவும் நல்லூரில்
நித்தியம் வந்து பார்த்தால் முத்தி நிச்சயமே.

(நற்சிந்தனை)


வல்வினை நீக்கும் தெய்வம்
வரமெலாம் நல்கும் தெய்வம்
எல்லையில் கருணைத் தெய்வம்
எம்பெரும் நல்லைக்கந்தன்

தங்கநகைப் பிரியர்களுக்கு நம்பிக்கை
அளிக்கும் ஸ்தாபனம்

## செல்லையா சிவபாதலிங்கம்

வைரக்கல் நகை வியாபாரம்
சிறந்த வேலைப்பாடுள்ள தங்க, வைர
நகைகளை விரும்பிய டிசைன்களில்
தெரிவு செய்யலாம்.
ஓடர் நகைகள் குறித்த தவணையில்
சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்
220, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7794



இப்பொழுது விற்பனையாகிறது !

## பறவைகளே

ஆசிரியர்: க. சச்சிதானந்தன்

விலை 15/- ரூபா

## காந்தளகம்

213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.



காந்தனைக் கந்தக் கடம்பனைக்
கார்மயில் வாகனனைச்
சாந்துணைப்போது மறவாதவர்க்
கொருதாழ்விலையே

உங்கள் எண்ணக் கனவுகளுக்கு
ஏற்ற தெரிவுகளுக்கு
ஜவுளிக் கடல்

## வாகினி ரெக்ஸ்ரைல்ஸ்

81, பெரியகடை, யாழ்ப்பாணம்.



நல்லையம் பதிக்குச் சென்றால்
நலிவுகள் அனைத்து நீங்கும்
எல்லையில் கருணை நல்கும்
எழிற் கந்தன் காட்சி காண்போம்.

எல்லாவித பலசரக்குச் சாமான்களும்
மாளிகைச் சாமான்களும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்

நியாயவிலையில் பெற்றுக்கொள்ளுமிடம்

## A. சின்னத்துரை & சன்ஸ்

13, பசார் லேன்,
யாழ்ப்பாணம்.



நம் எல்லார்க்கும் அமைதியும் இன்பமும் கிட்ட
நல்லைக் கந்தனைப் பிரார்த்திப்போமாக

## கலாஜோதி மில்

மானிப்பாய் வீதி — யாழ்ப்பாணம்.



விழிக்குத்துணை திருமலர்ப்பாதங்கள்
மெய்ம்மை குன்றா
மொழிக்குத்துணை முருகாவெனும் நாமங்கள்
முன்பு செய்த
பழிக்குத்துணையவன் பன்னிரு
தோளும் பயந்ததனி
வழிக்குத்துணை வடிவேலுஞ் செங்கோடன்
மயூரமுமே

எல்லாவித சாப்புச் சாமான்களும்
நிதான விலையில் பெற்றுக்கொள்ள

## சியாமளா

140, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம். தொலைபேசி; 8078

★ யாழ் நகரிலிருந்து சௌகரியமாகக்
கொழும்பு செல்வதற்கு—பஸ் சேவை
நிலாந்தி ரவல்ஸ்
★ யாழ்ப்பாணம் – திருகோணமலை சேவைக்கு
வன்கொன் ரவல்ஸ்
★ யாழ். நகரிலிருந்து மட்டுநகர் ஊடாக
கல்முனை செல்வதற்கு-
கலாரவல்ஸ் / லக்கி ரவல்ஸ்

உங்கள் ஆசனங்களைப் பதிவு செய்வதற்கும்
மற்றும் விபரங்களுக்கும்
சியாமளாவுடன் தொடர்புகொள்ளுங்கள்



ஒருகால் நினைக்கின் இருகால் தோன்றும் முருகனை
திருநல்லையில் காண்போம் வாரீர்

★ சுவைப் பிரியர்களே!
★ சுத்தமான, சுகாதாரமான
உணவு வகைகளுக்கு
யாழ் நகரில் நம்பிக்கை பெற்றது

## லட்சுமி விலாஸ்

சைவஹோட்டல்

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
விருந்து வைபவங்களுக்குப் பட்சணங்கள்
ஓடருக்குத் தயாரித்துக் கொடுக்கப்படும்.



கருணைகூர் முகங்களாறும்
கரங்கள் பன்னிரண்டும் கொண்டு
உலகமுய்ய உதித்திட்ட கந்தக் கடவுளே !
நல்லைப் பதியுறையுந் தெய்வமே !
எம் இடர்களெல்லாம் தீர்த்து
எங்கும் அமைதி நிலவ அருள்புரிக

வடபகுதி விவசாயப் பெருமக்களே ! உங்கள் விவசாய
உற்பத்திகள் எதுவானாலும் நம்பிக்கையுடன்
எம்மிடம் ஒப்படையுங்கள் - நீங்கள் எதிர்பார்க்கும்
பெறுமதியிலும் அதிகமாக நாம்
பெற்றுத்தருகின்றோம்

# ஸ்ரீ திருப்பதி ஏஜன்ஸி

130, நான்காம் குறுக்குத் தெரு,
கொழும்பு—11
தொலைபேசி: 29676

கிளை:-
திருப்பதி ஸ்ரோர்ஸ் / திருப்பதி ஏஜன்ஸி
51, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7119—7881

---

நல்லூர்க் கந்தனின்
மஞ்சத் திருவிழா காணச்செல்லும்
அடியார்க்கு இன்னருள் பாலிக்க
"அண்ணா கோப்பியினரும்"
பிரார்த்திக்கின்றனர்.

ஊக்கத்துக்கும்
உற்சாகத்துக்கும்

# அண்ணா
# கோப்பி




சுவை குன்றாமல் உடனுக்குடன் உங்கள் முன்னிலையில்
வறுத்து அரைத்து வேண்டிய அளவுகளில்
பெற்றுக்கொள்ள விஜயம் செய்யுங்கள்

# அண்ணா தொழிலகம்

இணுவில்
தொலைபேசி: 7412

கிளைகள்:
இல. 4, நவீன சந்தை, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7413
இல. 1, மத்திய சந்தை, சுன்னாகம்.

அண்ணா தயாரிப்பு வெற்றுப் பக்கற்றுகளைச் சேகரித்து
அனுப்பிப் „பரிசில்களை"ப் பெற்றுக்கொள்ளுங்கள்.

---

அனைவர்க்கும் நல்லைக் கந்தன்
அருள் பாலிப்பானாக !

அழகிய பவுண் நகைகள்
தங்கப் பவுண் வைரங்களுக்கு

# கே. என். எம். மீரான் சாஹிப்

தங்கப்பவுண் நகைமாளிகை
நகை வியாபாரம்
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
போன்: 585

---

அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
நல்லைக் கந்தன் அருள் பாலிப்பானாக !

# ராஜு ஸ்ரோர்ஸ்

இறக்குமதி செய்யப்பட்ட
பால்மா வகைகள், நூதன விளையாட்டுச் சாமான்கள்,
கோப்பை, பீங்கான், கிளாஸ்,
எனாமல் அலுமினியம், எவர்சில்வர் சாமான்களும்

**நெல் குற்றும், மாவு அரைக்கும்**
**இயந்திரங்கள் அதன் உப உறுப்புகள்**

சுவர் மணிக்கூடுகள், கைக்கடிகாரங்கள்,
மின்சார மோட்டோர்கள் மின்சார விசிறிகள்,
மின்சார உபகரணங்கள்
மற்றும் சில்லறைச் சாமான்களுக்கும்
சுவைமிக்க பேபி மார்க் குளிர்பானங்களுக்கும்
இன்றே விஜயஞ்செய்யுங்கள் !
67, 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 372
தந்தி: ராஜு

---

ஆறிருதடந்தோள் வாழ்க!
அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய்தனிவேல் வாழ்க!
குக்குடம் வாழ்க! செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க!
மாறிலா வள்ளி வாழ்க!
யானைதன் அணங்கும் வாழ்க!
வாழ்க சீர் அடியார் எல்லாம்!

★

நல்லெண்ணைகளுக்கெல்லாம் ராஜா

# நல்லெண்ணை ராஜா

நல்லெண்ணை ராஜாவை யாழ். மானிப்பாய்
வீதியிலுள்ள பரிமளாஸ்ரோர்ஸில் சந்திக்கலாம்

**V. S. P. ஸ்பெஷல்**
**லஞ்ச் ஒயில்**

உணவில் நல்லெண்ணை சேர்ப்பதன் மூலம் உங்கள்
உடலையும் இருதயத்தையும் பலப்படுத்துகிறீர்கள்.

# பரிமளா ஸ்ரோர்ஸ்

வி.எஸ்.பி. ஸ்பெஷல் நல்லெண்ணை விற்பனையாளர்

26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7224